DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC .No. 66/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முக சுந்தரம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்புசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | பாரவலசு | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.01.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னுடைய வங்கி வரவு செலவு கணக்கை நீதிமன்றத்தில் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் எதிரிக்கு ரொக்கமாக தான் பணத்தை கொடுத்தேன். வங்கி பண பரிவர்த்தனை மூலம் கொடுக்கவில்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் ரூ.4,90,000/- ரொக்க பணம் கை வசம் இருந்தது என்பதை காட்ட ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் ஆடு விற்ற வகையிலும், விவசாய வருமானமும் மற்றும் தேங்காய் விற்ற வகையிலும் என்னிடம்ரொக்க பணம் இருந்தது.

2. எனக்கு சொத்துக்கள் உள்ளது என்பதை காட்ட அது சம்மந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எனது பெயரில் விவசாய பூமி எதுவும் கிடையாது என்றும், அதனால் விவசாய மூலம் எனக்கு எந்தவொரு வருமானமும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. காங்கயம்–கரூர் ரோட்டில் தமிழன் டைல்ஸ் கடையை நடத்தி வரும் சதீஷ்குமார், ராஜ்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியாது. அந்த தமிழன் டைல்ஸ் கடை மேற்படி சதீஷ்குமார், ராஜ்குமார், இவ்வழக்கின் எதிரி ஆகிய மூவரும் சேர்ந்து தான் கடையை 2018ம் ஆண்டில் ஆரம்பித்தார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

3. அந்த ராஜ்குமார், சதீஷ்குமார் ஆகியோருடன் எதிரிக்கு வரவு செலவு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு 2019ம் வருடத்தில் எதிரி மேற்படி டைல்ஸ் கடையிலிருந்து விலகி கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த டைல்ஸ் கடையின் வியாபார சம்மந்தமாக எதிரியின் காசோலை புத்தகம் கடையில் இருந்தது என்றும், அந்த எதிரியின் காசோலைகளை ராஜ்குமார், சதீஷ்குமார் ஆகிய இருவரும் எடுத்து எனக்கும், எதிரிக்கும் ஏற்கனவே பாகபிரிவினை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருவதை வைத்து கொண்டு மோசடியாக எனது பெயரில் காசோலையை பூர்த்தி செய்து அதன் மூலம் நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை எதிரி கொடுத்த பதிலறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

4. எனக்கு ரூ.4,90,000/–ஐ கடனாக கொடுக்கும் அளவிற்கு போதிய வசதி வாய்ப்பும், வருமானமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது எனக்கு இருந்து வந்த முன்பகை காரணமாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. நான் சொல்வது போல 02.03.2021ம் தேதியில் இவ்வழக்கு காசோலை தொகையான ரூ.4,90,000/—ஐ கடனாக வாங்கியதும் கிடையாது, அதற்காக எதிரி எனக்கு இவ்வழக்கு காசோலையை கொடுத்ததும் கிடையாது, எனக்கும் எதிரிக்கும் இடையே வரவு செலவு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed/before me in open Court read over/interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2024.01.10 02:09:25 +0530

Judicial Magistrate
Kangayam.